ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல. - PS/SB/Circular/03/2025
2025 மார்ச் மாதம் 24 ஆம் திகதி

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்**

## “வளமான நாடு – அழகான வாழ்க்கை” அரசின் கொள்கைப் பிரகடன செயற்பாட்டை மேற்பார்வை செய்தல்

**1.0 பின்வரும் விடயங்கள் தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.**

(அ) 25/0389/804/046 ஆம் இலக்க மற்றும் 2025.03.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவைச் செயலாளர்கள், 1) “வளமான நாடு – அழகான வாழ்க்கை” கொள்கைப் பிரகடனத்தை அரசின் தேசிய கொள்கைச் சட்டகமாக அங்கீகரித்தல் மற்றும் 2) அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் அரசின் தேசிய கொள்கைச் சட்டகத்திற்கு அமைவாக தமது அமைச்சுக்கள், அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் விடய எல்லைகளுக்கு உட்பட்ட கடமை நடவடிக்கைகள் மற்றும் பணிகளை முறையாக திட்டமிடுவதற்குத் தாமதிக்காது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) சனாதிபதியின் செயலாளரால் அரச கொள்கைகளை நிறைவேற்றல் தொடர்பில் அமைச்சுக்களின் முன்னேற்றத்தை அறிக்கையிடலின் மேற்பார்வைக்கான வழிகாட்டல் எனும் தலைப்பில் அமைச்சரவைச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட PS/SB/M&E ஆம் இலக்க மற்றும் 2025.02.05 ஆம் திகதிய கடிதம்.

**2.0** மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரவைச் செயலாளர்களுக்கு தேவையான அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கு சனாதிபதியின் செயலாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இப்பணிக்கான அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்ட மேலே 1.0 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட கடிதம் தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன். (இணைப்பு 1 ஐ பார்க்கவும்)

**3.0** குறித்த கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் பிரகாரம் அமைச்சுக்களால் அவர்கள் மூலம் இனம் காணப்பட்டுள்ள கடற்பாடுகள் (Commitments) தற்போது மீளாய்வு செய்யப்பட்டு உத்தேச திருத்தங்கள் இந்த அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உங்களது அமைச்சு தொடர்பில் இனம் காணப்பட்டுள்ள கடற்பாடுகளை விவரிக்கும் இணைப்பு 2 ஐ பரிசோதிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். (இணைப்பு 2இன் கடற்பாடுகளின் மென்பிரதி உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்)

**4.0** அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களால் இணைப்பு 3இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலாற்றுகை மேற்பார்வை சட்டகத்தின் பிரகாரம் தமது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடற்பாடுகள் தொடர்பில் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் 2025-2029 ஆம் கால எல்லைக்கான மூலோபாயத் திட்டம் சனாதிபதி அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் இணைப்பு 3 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட



ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

திட்டங்களை பின்வரும் திகதிகளில் சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது.

அ) இணைப்பு 3 இல் உள்ளவாறு 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் - 2025 ஏப்ரல் 11

ஆ) 2025-2029 இற்கான மூலோபாயத் திட்டம் - 2025 யூன் 30

**5.0** இத்திட்டங்களைத் தயாரித்தல் தொடர்பான விசாரணைகள் / விளக்கங்கள் அல்லது ஏற்புடைய ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதியின் மேலதிக செயலாளர், செல்வி சந்திமா விக்ரமசிங்ஹ அவர்களைத் தொடர்பு கொள்ள முடியும். (011–2354436; 077-3466871/மின்னஞ்சல்: chandiw@presidentsoffice.lk ).

**6.0** 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள் உரிய திகதியில் இந்த அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அனைத்து அமைச்சுக்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும் "Ministry Performance Monitoring System" எனும் டிஜிட்டல் மேடையின் ஊடாக செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடற்பாடுகளை நிறைவேற்றும் முன்னேற்றத்தை காலாண்டு ரீதியில் ஒவ்வொரு அமைச்சும் சனாதிபதி அலுவலகத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

**7.0** ஒவ்வொரு அமைச்சும் இந்த ஆண்டுக்கான முதலாவது காலாண்டு ரீதியான முன்னேற்றத்தை 2025 மே மாதம் 30 ஆம் திகதியளவில் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்கால காலாண்டு ரீதியான முன்னேற்றத்தை உரிய காலாண்டு நிறைவடைந்த பின்னர் ஆரம்பமாகும் மாதத்தின் 2 ஆம் வாரத்திற்குள் பின்வரும் வகையில் அறிக்கையிடல் வேண்டும்.

- இரண்டாம் காலாண்டு முன்னேற்றம் - 2025 யூலை 11
- மூன்றாம் காலாண்டு முன்னேற்றம் - 2025 ஒக்டோபர் 10
- நான்காம் காலாண்டு முன்னேற்றம் - 2026 சனவரி 09

**8.0** அமைச்சின் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்காக இந்த டிஜிட்டல் மேடையைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி செயலமர்வில் அனைத்து அமைச்சுக்கள் மூலமாகவும் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள் (Point of Contacts - POCs) எதிர்காலத்தில் அழைக்கப்படவுள்ளார்கள்.

**9.0** அரச கொள்கைப் பிரகடனத்தின் கடற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் பொருளாதார, சமூக, சூழல் மற்றும் அரசியல் அபிலாசைகளை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே இந்த செயன்முறைக்கான உங்களது செயலூக்கமான பங்கேற்பு, ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒப்பம்/ கலாநிதி என்.எஸ். குமாநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

*தொலைபேசி: +94 11 2354420 தொலைநகல்: +94 11 2446657*
*மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk*

பிரதி : பிரதம அமைச்சரின் செயலாளர்
அமைச்சரவைச் செயலாளர்
பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்